# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 வைகாசி 32 திங்கட்கிழமை (14-06-1993) UTHAYAN – A Lively National Tamil Daily கதிர் 198


# சாகும்வரை உண்ணாவிரதத்தை யுத்தக் கைதிகள் ஆரம்பித்தனர்

## செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அதிகாரி நேரில் சென்று பார்த்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 14

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள 39 சிங்கள யுத்தக் கைதிகளும், "தமது சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை சனிக்கிழமை நள்ளிரவு ஆரம்பித்தனர்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. பியட் சுவஸ்ஸர் யுத்தக் கைதிகளை நேரில் சென்று பார்த்து, அவர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்த தகவலை தமது கொழும்புத் தலைமையகத்துக்கு அறிவித்தார்.

தாம் சிறை பிடிக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்து விட்டபோதிலும், தம்மை விடுவிப்பதற்கு சிறிலங்கா அரசாங்கம் எவ்வித முயற்சியும் எடுக்காமல் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதை கண்டித்தே யுத்தக் கைதிகள் சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர்.

உண்ணாவிரதத்தைத் தொடங்கியுள்ள 39 யுத்தக் கைதிகளில் 38 பேர் பொலீசார் ஆவர். இவர்கள் ஈழப்போர் — இரண்டு தொடங்கிய முதல் வாரத்தில், விடுதலைப் புலிகளால் சிறைப்பிடிக்கப்பட்டவர்.

அடுத்தவர் இராணுவச் சிப்பாய் ஆவார். இவர் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆனையிறவுப் போரின்போது விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதியாகப் பிடிக்கப்பட்டவர்.

இவர்கள் 39 பேரும், தம்மை விடுவிக்க நடவடிக்கை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## உயிரைப் பணயம் வைத்துப் போராடுவதால் எங்களை விடுவிக்க அரசு முயற்சி எடுக்கும்

### உண்ணாவிரதத்தை ஆரம்பித்த யுத்தக்கைதி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

"நீண்ட காலமாகப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் எங்களுக்கு விடுதலை கிடைக்காததால் விடுதலை வேண்டி இந்த உண்ணாவிரதத்தை ஆரம்பிக்கிறோம். உயிரைப் பணயம் வைத்து இந்தப் போராட்டத்தை நாம் நடத்துவதானால் எம்மை விடுவிக்க அரசு முயற்சி எடுக்கும் என நாம் நம்புகிறோம்."

இவ்வாறு கூறினார் யுத்தக் கைதியாக விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் இருக்கும் ஒரு பொலீஸ்காரர்.

தாங்கள் தொடங்கியிருக்கும் உண்ணாவிரதப் போராட்டம் குறித்து கருத்து வெளியிடுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எமது நிலை குறித்து அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் ஏற்கனவே தகவல் அனுப்பியிருக்கிறோம்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு மூலம் அரசியல் கடிதங்களை நாம் அனுப்ப முடியாது. எனவே இது

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடற் தாக்குதல் தளபதிக்கு நேற்றுமக்கள் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூன் 14

கடந்த வெள்ளியிரவு கிளாலிக் கடற்பரப்பில் மக்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த சமயம், ஸ்ரீலங்கா கடற்படையினருடன் இடம்பெற்ற கடற்போரில் வீரச்சாவடைந்த கடற்புலிகளின் கடற் தாக்குதல் படைத்தளபதி லெப்டினன்ட் கேணல் சாள்ஸ் மற்றும் லெப்டினன்ட் மகான் ஆகியோரின் புகழுடல்களுக்கு நேற்று யாழ். குடாநாட்டு மக்கள் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

நேற்று குடா நாட்டின் பல பகுதிகளிலும் இரு வேங்கைகளினதும் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

நேற்றுக் காலை 8 மணிக்கு லெப்டினன்ட் கேணல் சாள்ஸின் புகழுடல் இன்பருட்டியில் இருந்தும்—

லெப்டினன்ட் மகானின் பூதவுடல் கல்வியங்காட்டில் இருந்தும்—

ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அச்சுவேலி பஸ் நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

அங்கிருந்து ஊர்வலமாக எடுத்துவரப்பட்ட புகழுடல்கள் முற்பகல் 10-30 மணியளவில் சுன்னாகம் பஸ் நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## பிரேமா கொலைச் சந்தேகநபரின் விவரத்துடன் ஹெலி மூலம் பிரசுரம்

### வடக்கு, கிழக்கில் இன்று வீசப்படுமாம்

கொழும்பு, ஜூன் 14

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவைப் படுகொலை செய்ததாகக் கூறப்படும் நபர், சாவகச்சேரியைச் சேர்ந்த 23 வயதான குலவீரசிங்கம் வீரக்குமார் தான் என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்வதற்காக வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்களின் ஒத்துழைப்பை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நாடியுள்ளது. என இலங்கை வானொலி அறிவித்தது.

சந்தேக நபரின் புகைப்படத்தையும் அவரின் தோற்றம் பற்றிய தகவல்களையும் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் ஆயிரக்கணக்கில் இன்று வடக்கு - கிழக்கில் ஹெலிக்கொப்டர்கள் மூலம் போடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

திரு. பிரேமதாஸாவைக் கொலை செய்தவர் விடுதலைப் புலிகளின் தாக்குதல் படையைச் சேர்ந்த வீரக்குமார் என்பதை ஊர்ஜிதம் செய்யக் கூடிய தகவல்களைத் தெரிவிப்போருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படும் என்று குப்பறியும் பொலீஸைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

பி.பி.ஸியின் மூலம்

## யுத்தக்கைதி ஒருவரின் தாயார் தலைவர் பிரபாவுக்கு கடிதம்

### லண்டன் அலுவலகத்திடம் கையளிப்பு

லண்டன், ஜூன் 14

யுத்தக் கைதியாக விடுதலைப் புலிகளின் காவலில் இருக்கும் பொலீஸார் ஒருவரின் தாயார், விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு எழுதிய கடிதம், பி.பி.ஸி. மூலம் புலிகளின் லண்டன் அலுவலகத்திடம் கையளிக்கப்பட்டது.

ஆரியவதி என்ற இந்தப் பெண்மணி, தலைவர் பிரபாகரனுக்கு தாம் எழுதிய கடிதத்தை அவரிடம் ஒப்படைக்குப்படி செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் கேட்டதாகவும்—

அவர்கள் அதனை ஏற்க மறுத்ததால் வேறு வழியின்றி, கடிதத்தை விடுதலைப் புலிகளிடம் சேர்ப்பிக்குமாறு கோரி

( 4 ஆம் பக்கம் பார்க்க)

காவலில் உள்ளோரின்

## உறவினர்களை அழைத்துவர விசேட கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஜூன் 14

விடுதலைப் புலிகளால் யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் 38 பொலிஸாரையும், மற்றும் ஒரு சிப்பாயையும் பார்வையிட எதிர்வரும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் வரவிருக்கும் அவர்களின் உறவினர்களை அழைத்து வருவதற்கு விசேட கப்பல் ஒன்றை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் ஒழுங்கு செய்துள்ளனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் குடும்பங்களில் இருந்து இருவர் வீதம் 78 பேர் வடக்கே அழைத்து வரப்படுவதற்காக முதலில் திருமலைக்குக் கூட்டிச் செல்லப்படுவர்.

அங்கிருந்து அவர்களை பருத்தித்துறைக்கு அழைத்து வந்து மீண்டும் திருமலைக்கு அழைத்துச் செல்ல வசதியாக "நகர" கப்பலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூன்று நாட்களுக்கு வாடகைக்கு அமர்த்தியுள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் இக்கப்பல் மீண்டும் சனிக்கிழமை மாலை திருமலை நோக்கித் திரும்பிச் செல்லும்.

(உ-3)

## ஈழ அகதிகளை தற்சமயம் சுவிஸ் திருப்பி அனுப்பாதாம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

சுவிஸில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களில் சுமார் இரண்டாயிரத்து 700 பேரை திருப்பி அனுப்பும் திட்டம் இப்போதைக்கு அமுல் செய்யப்படமாட்டாது.

அகதிகளுக்கான ஐ நா. தூதரகத்தின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி கலாநிதி பீற்றர் நிக்கலெஸ் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு செப்டம்பர் முதலாம் திகதிக்குப் பின்னர் சுவிட்ஸர்லாந்தில் தஞ்சம் கோரிய 2 ஆயிரத்து 700 ஈழ அகதிகளைத் திருப்பி அனுப்புவது தொடர்பாக இலங்கையும், சுவிட்சர்லாந்தும் உடன்படிக்கை ஒன்றைப் பூர்த்தி செய்ய விருப்பதாகவும்—

திரும்பும் அகதிகளை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் கொழும்பில் வைத்து கண்கா

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் கைதான தமிழர் விவரம் செஞ்.குழு சேகரிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 14

கொழும்பில் கடந்த வாரங்களில் பொலீஸாரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்கள் பற்றிய விவரங்களை செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு சேகரித்து வருகிறது.

சுமார் 400 க்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டு பல பொலீஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானோரின் நிலை பற்றிய விவரத்தை பெற்றுத்தருமாறு அவர்களின் உறவினர்கள் செய்த முறைப்பாட்டை அடுத்தே செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் பல பொலீஸ் நிலையங்களுக்கு சென்று தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் விவரங்களை சேகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

பாடசாலை அலுவலக உபகரணங்களை பெற்றுக் கொள்ள, சுரேசா புத்தகக் களஞ்சியம், இல. 25, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(6250)

## இடமாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.
(6245)

## ஆங்கில வகுப்புகள்

வலி-வடக்கு ஓய்வூதியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட இலவச ஆங்கில வகுப்புகள் மீண்டும் ஆரம்பிக்கப் படவுள்ளன. முன்னர் கற்ற மாணவர்கள் உடனடியாக வை பொன்னையா சோடாக் கொம்பனி கிழக்கு ஒழுங்கை, மல்லாகம் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
(5949)

## தவறி விழுந்து மரணம்

முற்றத்தில் இருந்த தண்ணீர் வாளியை எட்டிப் பார்த்து விளையாடிய சிறுவன் ஒருவன் தவறுதலாக அந்த வாளியினுள்ளே விழுந்து மரணமானான்.

கல்லாக்கட்டுவன் ஆச்சிரமத்திற்கு அண்மையில் உள்ள இடம் பெயர்ந்தோர் முகாமிலேயே இச் சம்பவம் இடம் பெற்றது. மரியதாசன் (வயது 1½) என்பவரே இறந்தவராவார். (த-143)

## புற்று நோய் மருத்துவ உபகரணங்கள்

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க வசதியாக, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தேவையான மருந்து வகைகள் என்பன விரைவில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதற்கான முன்னறிவித்தல் கடிதம் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மகரகம புற்று நோய் ஆஸ்பத்திரியில் கதிர் இயக்க சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு யாழ்ப்பாணத்திலேயே தொடர் சிகிச்சை அளிக்க இவை பயன்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
(த-15)

நெல்லியடி
M. M. V. வீதியில்

பௌதிகம்

**திரு. கணேசன்**

**94 95 A/L**

ஆரம்பம்:
20-06-1993
(26086)

## ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்

11-06 1993 உதயன் 2ஆம் பக்கத்தில்—

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் வாக்காளர் பட்டியல் 31-03-1993 என்ற விளம்பரத்தின்—

நான்காவது வரியை—

கிளை 8, 11 க்குரியவை—நிவாரணக் கிளை 3 இலும் எனத் திருத்தி வாசிக்கவும்.

# இடமாற்றம்

54A, நவீன சந்தையில் இயங்கி வந்த KRISHNA TEX தற்பொழுது வாடிக்கையாளர்களின் நலன் கருதி கீழ்வரும் முகவரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**கிருஸ்ணா ரெக்ஸ்**
இல. 164, நவீன சந்தை,
ஷண் றெக்கோடிங் ஸ்பொட் அருகில்
யாழ்ப்பாணம்.
(6256)

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 05 — 01 — 1953 | 14 — 06 — 1990 |

அமரர்
**புஷ்பரஞ்சினி பொன்னுத்துரை**

''மலர்கள் மெல்ல இதழ் விரிக்க - புஷ்ப
வதனம் அங்கு தெரியுது
மரத்தில் இலைகள் சலசலக்க - உங்கள்
மழலை மொழி கேட்குது
மெல்ல வீசும் தென்றல் காற்றில் - உங்கள்
மென்மை நடையும் புரியுது
இழையும் தெய்வ இசையில் - உங்கள்
இனிய குரலும் ஒலிக்குது
இயற்கையோடு நீங்கள் சென்று
இணைந்து விட்டதேனம்மா!
இறைஞ்சுகின்றோம் எம்மிடையே
மீண்டும் வந்து சேரம்மா''

- அன்புக் குடும்பத்தினர்.

மகளிர் கல்லூரி வீதி,
சாவகச்சேரி.
(26081)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**ம. கிறிசோஸ்ரம் பொன்ராசா**
(கரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை)

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 09 — 10 — 1916 | 15 — 05 — 1993 |

உங்கள் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தினாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு என்றும் அகலாது. உங்கள் ஆன்மாவிற்கு நித்திய இளைப்பாற்றினை அளித்திட இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்,
[illegible]

27, சுவாட்ஸ் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
[26067]

# இரட்டை சூட்டடுப்பு பாவனை பற்றிய கருத்தரங்குகள்

விறகினைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் நோக்குடன் தொழில் நுட்பத்துடன் வடிவமைக்கப்பட்ட இரட்டை சூட்டடுப்பின் பாவனை முறை பற்றியும், பயன்பாடு பற்றியும் விளக்கவுரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் சக்திப் பகுதியினர் வழங்கிவருகின்றனர்.

இதன் தொடர் நடவடிக்கையாக கிராமிய உற்பத்திக் குழுக்கள், சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக கருத்தரங்குகளை நடத்தவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

புத்தூர் கௌரி மகளிர் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் எதிர்வரும் 19 ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணிக்கு புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியிலும்—

ஆவரங்கால் மத்தி சிக்கனக் கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் எதிர்வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணிக்கு ஆவரங்கால் சிவகாமி ச. ச. நிலையத்திலும்—

புத்தூர் குமரகுருபரன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் எதிர் வரும் 20 ஆம் திகதி பிற்பகல் 3. 30 மணிக்கு புத்தூர் குமர குருபரன் ச.ச. நிலையத்திலும் மேற்படி கருத்தரங்குகள் இடம் பெறும்.
(த-5)

# யாழ்ப்பாணக் கல்லூரி

JAFFNA COLLEGE
CEYLON

வட்டுக்கோட்டை

## பட்டப்படிப்புகள் பிரிவு

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

* G. A. Q. — 1994 (முதற் கலைத்தேர்வு) வகுப்புகள் ஆரம்பமாகின்றன.

**பேராதனைப் பல்கலைக்கழகம்**

* B. A. — 1994 ஏப்ரல் (கலைமாணி) வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
* G. A. Q. — 1993 ஆகஸ்ட் மாதிரிப் பரீட்சைகள் ஆரம்பமாகின்றன.

**காலம்: 14 - 06 - 1993**
(இன்று) திங்கட்கிழமை பிற்பகல் 3மணி

பதிவுகளுக்கு முந்திக் கொள்ளவும்.

முதல்வர்,
யாழ்ப்பாணக் கல்லூரி.

(சி. 5254)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 08 — 08 — 1957 | 15 — 05 — 1993 |

**அமரர் தண்டாயுதபாணி முரளீதரன்**
[பிரபல ஓவியர்]

அந்தியேட்டி: 15-06-1993

மைவண்ண வேய்ங்குழல் மாதவனின்
பெயருடையோன்
கைவண்ணம் காட்டி கலை பலவும்
படைத்திடுவோன்
மெய் வண்ணம் தன்னில் மேதினியில்
தானுயர்ந்தோன்
சொல் வண்ணம் ஊட்டி பிறர் சிரிக்கப்
பேசிடுவோன்

நாளை (15-06-1993) செவ்வாய்க்கிழமை நடைபெறும் அந்தியேட்டி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறோம்.

திருமதி தண்டாயுதபாணி பரமேஸ்வரியும் (தாய்),
திருமதி லீலாவதி முரளீதரன் குடும்பத்தினரும்.
(26092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

# எல்லோரையும் ஏமாற்றுவதற்கா?

தென் தமிழீழத்தில்—கிழக்கில் — சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி வடக்கு - கிழக்கு இணைப்பு விவகாரத்துக்கு, சர்ச்சைக்கு முடிவுகாண வேண்டும் என்ற தெரிவுக்குழுவின் சிபார்சை அரசியல் அவதானிகள் கண்டித்திருக்கிறார்கள்.

இந்த யோசனை நடைமுறைப்படுத்தப் படுமானால் அது வடக்கு-கிழக்கு நிலைமையை மேலும் சிக்கலாக்கும், மோசமடையச் செய்யும் என்று அவர்கள் தீர்க்க தரிசனத்துடன் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட்டாலும் கூட, யுத்தம் நிறுத்தப்படாமல், யுத்தநிறுத்தம் செய்யப்படாமல் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. சமாதானத்தை உருவாக்க முடியாது என்றும் அவர்கள சரியாக இடித்துரைத்திருக்கிறார்கள்.

இலங்கையின் கிழக்குப் பகுதி தமிழீழத்தின் ஒரு பிரிக்க முடியாத அங்கம். பன்னெடுங் காலமாக தமிழர்களும், பின்னர் முஸ்லிம்களும் வந்தமர்ந்து வாழும் தமிழ் பேசும் பிராந்தியம். எனினும் அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் கடந்த ஐம்பது வருடங்களுக்கு மேலாக அரசாங்க ஆதரவில் நடத்தப்பட்ட, நடத்தப்படும சிங்களக் குடியேற்றங்களினால், கிழக்கில் சிங்களவர்களே இப்போது இரண்டாவது பெரும்பான்மையினராக மாறியுள்ளனர்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு ஏழு வருடங்களுக்கு முன்னர், இரண்டாம் உலக யுத்தம் நிகழ்ந்த காலத்தில் வடக்கு-கிழக்கில் வாழ்ந்த சிங்களவர்கள் எட்டு சத வீதத்தினர் மட்டுமே! ஆனால் 1988 ஆம் ஆண்டு கிழக்கில் மட்டும் பதியப்பட்ட சிங்கள வாக்காளர் எண்ணிக்கை 33.6 வீதமாகும் தமிழர்களோ 36.4 வீதமாகக் குறைந்து போயினர்.

கிழக்கின் இனவிகிதாசாரத்தை மாற்றி அதனை ஒரு சிங்களவர் மாகாணமாக்கும் சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் திட்டமிட்ட செயற்பாடுகளின் மொத்த விளைவு இது அவர்களுக்குக் கிடைத்த சாதகமான பெறுபேறு இது.

1990 போர் தொடங்கிய பின்னர், கிழக்கில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் படைகளால் கொல்லப்பட்டு விட்டனர். மேலும் பலர் அங்கு வாழ முடியாமல் இடம் பெயர்ந்து வட தமிழீழத்துக்கும், அகதிகளாக வெளிநாடுகளுக்கும் சென்றுவிட்டனர். இதே வேளை, போர் என்ற போர்வைக்குக் கீழே ஆயுதப் படையினரின் பாதுகாப்புடன் லட்சக் கணக்கான சிங்களவர்கள் கிழக்கில் குடியேற்றப்பட்டுள்ளனர். தமிழர் கிராமங்கள் பலவும் சிங்களவர்களின் குடியேற்றங்களாக உருமாறி உள்ளன!

இவ்வாறு கிழக்கின் இன விகிதாசாரத்தை முற்றாக உருமாற்றி, அதனைச் செயற்கையான சிங்களப் பெரும்பான்மை பிரதேசமாக்கிவிட்டு அங்கே இணைப்புக் குறித்து சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது என்பது பெரும் சதி நாசச் செயலாகும் உலகத்தை ஏமாற்றும் சூழ்ச்சி இது.

கிழக்கை சிங்களவர் பிரதேசமாக்கிவிட வேண்டும் என்ற நீண்ட கால நோக்கத்தை அடைய இந்த சர்வசன வாக்கெடுப்பு வாய்ப்பாக அமையும் எனச் சிங்களக் கட்சிகள் நப்பாசை கொள்ளலாம்.

ஆனால் தமிழர்கள் அதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழர்களின் இணக்கம் இன்றித் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பது யாதார்த்தமனதா? நடைமுறைச் சாத்தியமானதா? இது உலகத்தையும் தமிழர்களையும் ஏமாற்றுவதாக மட்டுமன்றி, சிங்களவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றுவதாகவும் முடியும்!

## ஆலயங்களில்

சுழிபுரம் பறாளை விநாயகர் ஆலய வருடாந்த உற்சவம் நாளை ஆரம்பமாகும். பதினோராவது நாள் தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (உ-28)

o o o

சுன்னாகம் மயிலணி அருள்மிகு கந்தசுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். (உ-89)

o o o

கொக்குவில் மாத்தனைக் கந்தசுவாமி கோவிலில் வருடாந்த உற்சவம் நாளை மறு பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். எதிர்வரும் 25 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

உற்சவகாலத்தில் தினமும் மாலை 7.15 மணி முதல் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் தெய்வீகப் பேருரை நிகழ்த்துவார்.

# விளையாட்டு நிகழ்வுகள்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம "உதயன்" கிண்ணத்திற்காக—ஏழுபேர் கொண்ட அணிகளுக்கிடையில் — பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் முதலாவது அரையிறுதி ஆட்டம் இன்று மாலை நடைபெறும்.

இந்த ஆட்டத்தில் புங்குடுதீவு அம்பாள் "ஏ" அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதும்.

o o o

யாழ். பல்கலைக்கழகம் "உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பெண்கள் பிரிவுக்கான முதற்சுற்று ஆட்டங்கள் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும். பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- கொக்குவில் இந்துக் கல்லூரி அணி எதிர் யுதிகாமல் அணி

★ 4.45 மணி:- பமிலியன்ஸ் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி

## 2 கோடி ஒதுக்கீடு

தென்பகுதியில் வெள்ள நிவாரண வேலைகளுக்கு இரண்டு கோடி ரூபாவை ஒதுக்குவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளர் ஹரோல்ட் ஹேரத் செய்தியாளர் மாநாட்டில் வெளியிட்டார். (த-எ)

யாழ். மாநகர சபையின்

# ஆதனவரி அதிகரிப்பு ஆட்சேபனை; விசாரணை ஜூலை 5இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாநகரசபை ஆதன வரி அதிகரிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அது பற்றி வரியிறுப்பாளர்களினால் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனைகள் தொடர்பான விசாரணைகள் அடுத்த மாதம் 5ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

32 ஆயிரம் அலகுகளைக் கொண்ட யாழ். மாநகர சபை ஆதனவரியிறுப்பாளர்களிடம் இருந்து வரி அதிகரிப்பு பற்றி ஆயிரத்து 200 ஆட்சேபனைகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும்—அவை தொடர்பான விசாரணைகள் யாழ். மாநகரசபை அலுவலகத்தில் வைத்து மேற்கொள்ளப்படும் என்றும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

விசாரணைகளின் போது யாழ். மாநகரசபை உத்தியோகத்தர்களும், யாழ். மாவட்ட விலை மதிப்பீட்டாளர்களும் அங்கு சமூகம் அளிப்பர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை—

யாழ். மாநகரசபையின் 1993ஆம் ஆண்டு முதலாம், இரண்டாம் சந்தாயத்திற்கான ஆதனவரியை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் எவ்வித தண்டமும் இன்றிச் செலுத்தலாம் என்று அறிவிக்கப்படுகிறது.

## வர்த்தகத் திணைக்கள கிளைகளில்

# லக்ஸ்பிறே, சர்க்கரை, பயறு இன்றுமுதல் நியாயவிலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 14

வர்த்தகத் திணைக்களக் கிளைகளில் இன்று முதல் லக்ஸ்பிறே, சர்க்கரை, பயறு றவை என்பன நியாய விலையில் விற்பனை செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது

வர்த்தக திணைக்களத்துக்கு 'குமாரி' கப்பல் மூலம் பொருள்கள் எடுத்து வரப்பட்டுள்ளதை அடுத்து அவை பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட உள்ளன.

லக்ஸ்பிறே பக்கட் 60 ரூபாவாகவும், சர்க்கரை கிலோ 45 ரூபாவாகவும்.பயறு கிலோ 33 ரூபாவாகவும், றவை கிலோ 28 ரூபாவாகவும் மற்றும் சன்லைட் சவர்க்காரம் 8 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-5-162)

# பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்; யாழ். ஆஸ்பத்திரியில் தேக்கம்

அரியாலை; ஜூன் 14

யாழ். போதனா வைத்திய சாலையின் பிறப்பு இறப்பு பதிவு அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உரியவர்கள் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளத் தவறியதால் - 1989ஆம் ஆண்டிலிருந்து இந்த ஆண்டின் முற்பகுதி வரை ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் தேங்கிக் கிடப்பதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்களும் விநியோகிக்க முடியாத நிலையில் தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்பட்டது (த-17)

# கூட்டுறவாளர் தின விழா தொடர்பான போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படவுள்ள இவ் ஆண்டிற்கான கூட்டுறவாளர் தினவிழாவை ஒட்டிய — மாணவர்கள், அங்கத்தவர்கள் பணியாளர்களுக்கான போட்டிகள் எதிர் வரும் 19 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நடைபெறும்.

மாணவர்களுக்கான போட்டிகள் ஒவ்வொரு கோட்டக் கல்வி அதிகாரிகள் மட்டத்திலும்— அங்கத்தவர், பணியாளர்களுக்கான போட்டிகள் ஒவ்வொரு கூட்டுறவுக் கோட்ட. மட்டத்திலும் நடைபெற்று இறுதிப் போட்டிகள் அடுத்த மாத இறுதியில் நடைபெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-162)

## பரீட்சை முடிவு வெளியாகவில்லை

திருநெல்வேலி ஜூன் 14

யாழ். தொழில் நுட்பக் கல்லூரியில் கடந்த ஆண்டு நடைபெற்ற உயர் தேசிய வணிகத் தகுதித் தேர்வுப் பரீட்சைப் பெறுபேறுகள் இதுவரை வெளியாகவில்லை.

இதேவேளை—இந்த ஆண்டுக்கு மேற்படி பரீட்சைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகவிருக்கின்றன. இதனால் கடந்த ஆண்டு 2ஆம், 3ஆம் 4ஆம் ஆண்டுப் பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் மீண்டும் முழு ஆண்டுகளுக்கும் தோற்றுவதா என்ற இக்கட்டான நிலையில் உள்ளனர். (த-143)

# வேதகாலத்து முனிவர்களை எமக்கு நினைவுபடுத்தும் காஞ்சிப்பெரியார்

## நூற்றாண்டு விழா நிகழ்வில் சிவத்தமிழ்ச்செல்வி

யாழ்ப்பாணம், ஜூன் 14

காஞ்சி மாமுனிவர் ஜெகத்குரு சந்திரசேகர இந்திர சரஸ்வதி ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் ஒரு நடமாடும் தெய்வம். அவர் காஞ்சி மடத்தில் இருந்து கொண்டு மட்டும் அருள்பரப்பவில்லை. காலத்துக்குக் காலம் வெவ்வேறு திருவிடங்களில் முகாம் அமைத்து மக்களுக்கு ஆன்மீக போதனைகளைச் செய்து வருகிறார். கிராமம் கிராமமாக நடந்து மக்களுக்கு ஆண்டவனின் மகிமையைப் போதித்து அவர்களுக்குத் தாமும் தரிசனம் கொடுக்கிறார்.

அவரது காலடி படும் மண்ணை எடுத்து வைத்துப் பூசிப்பதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவர் பின்னால் செல்வது நாளாந்தக் காட்சி. அவரது தெய்வீக ஒளி மிளிரும் முகத்தையும், ஞானக்கண் பார்வையையும் தரிசிப்பது கிடைத்தற்கரிய அருட்பேறாகும்.

இவ்வாறு தெரிவித்தார் சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.

அனுஷ நட்சத்திரம் கூடிய வைகாசிப் பூரணை தினமான இம்மாதம் நான்காம் திகதி காஞ்சிமாமுனிவரின் நூறாவது பிறந்த தின விழா திருநெல்வேலி, குமாரசாமி வீதியில் உள்ள வேதாந்த மடத்தில் பக்திபூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

விசேட அபிசேகம் பூசைகளுடன் ஆரம்பமான விழாவுக்கு, மடாதிபதி சீலத்திரு ஸ்ரீசோமாஸ்கந்தவேள் சுவாமிகள் தலைமை வகித்தார்.

அங்கு காஞ்சிப் பெரியவரை தாம் தரிசித்த அனுபவத்தை எடுத்துச் சொல்லும் வகையில் பேசுகையிலேயே சிவத்தமிழ்ச் செல்வி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மடத்தின் மண்டபம் நிரம்பி வழியும் வண்ணம் பக்தர்கள் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

வேதகாலத்து முனிவர்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அங்கு மேலும் தெரிவித்ததாவது;

காஞ்சி மடத்தின் 68ஆவது பீடாதிபதியாக விளங்கும் ஜெகத் குரு அவர்கள் இந்து சமயத்தின் குரு-சீடர் பாரம்பரியத்தின் எடுத்துக் காட்டு. எண்பத்தேழு ஆண்டுகளாக முற்றும் துறந்த முனிபுங்கவராக வாழ்ந்து வருகிறார். வேதகாலத்து முனிவர்களை நினைவுபடுத்துகிறார். அவர்களது அருட் கொடையாகத் திகழ்கிறார்.

நூறாண்டுகள் வாழ்வது எல்லோருக்கும் கிடைத்தற்கரிய ஒன்று. ஆனால் காஞ்சி மாமுனிவர் இன்னமும் தமது அருளோங்கு கடமைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார், ஊருக்கு ஊர் சென்று மக்களுக்காக உழைக்கிறார்; உதவுகிறார். தமக்கு முதலாவது வாரிசை மட்டுமன்றி வாரிசுக்கு வாரிசையும் நியமித்துவிட்டு, தான் பூரண துறவறம் புரிந்து இறைபணி செய்கின்றார் — என்று தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் பேசுகையில் தெரிவித்ததாவது;

காஞ்சிப் பெரியவர் இறை பணி செய்வது மட்டுமன்றி மக்கட்பணியும் ஆற்றி வருகிறார். தாம் செல்லும் இடங்களில் மக்கள் வாரி வழங்கும் பொருள்களை வாங்கி ஏழை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறார். அவர்களது நலவுரிமைத் திட்டங்களுக்காக அவற்றை வழங்குகிறார்.

எமது பாக்கியம்

அவர் மேற்கொள்ளும் யாத்திரைகளின்போது மக்களுக்கு அருளுபதேசம் செய்து தரிசனமும் கொடுக்கிறார். அவர் தாம் ஒரு முனிபுங்கவராக விளங்கினாலும் மக்களின் ஆற்றலுக்கும் திறமைக்கும் மதிப்பளிப்பவர்.

அவர் அனைத்துச் சமயங்களையும் மதிப்பவர், ஏனைய மதங்களின் நல்ல கோட்பாடுகளைப் பாராட்டும் பண்பாளர். அவர் காலத்தில் நாம் வாழ்வதே எமக்குக் கிடைத்த பாக்கியம் — என்று தெரிவித்தார்.

விழாவை ஏற்பாடு செய்த மூதறிஞர் க. சி குலரத்தினம் காஞ்சி மாமுனிவரைப் பற்றி எழுதிய நூல் விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டது அந்நூல் இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

காஞ்சிப் பெரியவரின் நூற்றாண்டு பிறந்த தினத்தை முன்னிட்டு நிகழ்ந்த கனகாபிசேகம் நிகழ்வின் படமும் விழா இறுதியில் காண்பிக்கப்பட்டது. (அ)

# மருந்துகள் இல்லை!

பளை அரசினர் வைத்திய சாலையில் மருந்துகள் இல்லாததால் இங்கு சிகிச்சைக்காகச் செல்லும் நோயாளர்கள் பெரிதும் கஷ்டமடைவதாக தெரிவிக்கப்படுகிறது.

காய்ச்சலுக்கு வழங்கும் அஸ்ப்பிரின் குளிசைகள் கூட இங்கு இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-117)

# புதிதாக உணவு முத்திரை

யாழ். உதவி அரச அதிபர் பிரிவில் புதிதாக உணவு முத்திரைகளை வழங்க யாழ். உதவி அரச அதிபர் அலுவலகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும், இதுவரை வறுமை நிவாரண முத்திரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கே இவை வழங்கப்படும். 8ஆவது தொடர் உணவு முத்திரை விநியோகத்தின் போது இவர்களுக்கும் புதிதாக உணவு முத்திரைகள் வழங்கப்படும். (த-17)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பையா சோதிப்பிள்ளை

கைதடி நுணாவில், சாவகச்சேரியைச் சேர்ந்த சுப்பையா சோதிப்பிள்ளை 13-06-1993இல் சிவபதமடைந்துள்ளார். இவர் காலஞ்சென்ற வேலாயுதர் சுப்பையாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்ற பொன்னம்மா, பொன்னம்பலம் மற்றும் அகிலாண்டம், சின்னத்தம்பி, சரவணமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகாமிப்பிள்ளை (கனடா), கனகரத்தினம் (இங்கிலாந்து), சறோசினிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற தில்லைநாதர் மற்றும் இராசேஸ்வரி (இங்கிலாந்து). பரமேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், நகுலநாதன் லலிதாம்பிகை (கனடா), நாகராசா தனதாம்பிகை, சுந்தரேஸ்வரன் (கனடா), லோகராசேஸ்வரன் (கனடா), சஞ்சினி (இங்கிலாந்து), அமலன் (இங்கிலாந்து) ஆகியோரின் பேர்த்தியும், பிரதீபன், ஸ்ரீதரன், கஜந்தன், துவராகி, காயத்திரி, கவிராஜ் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14-06-93) காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே. பரமேஸ்வரன்,
ந, நாகராசா,
(சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்).

கைதடி நுணாவில்,
சாவகச்சேரி. (26087)

## ஆறுமுகம் சுப்பிரமணியம்
### (விழிசிட்டி)

தெல்லிப்பழை, விழிசிட்டி ஆறுமுகம் சுப்பிரமணியம் 13-06-93 இல் காலமானார். இவர் வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தடாதகைப் பிராட்டி (கல்முனை), சரவணபவன் (ஆசிரியர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், வேலாயுதபிள்ளை (ஸ்ரீமுருகன் ஸ்ரோர்ஸ், கல்முனை), நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் செந்திற்குமரன், செவ்வேள் குமரன், சுகிர்தன், சுதாகர் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவர்.

இறுதிக் கிரியைகள் 13-06-93 ஞாயிறு இருபாலை வீதி, கோண்டாவில் கிழக்கில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலைஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. சரவணபவன்

கோண்டாவில். (26084)

## திருமதி பறுபபத்தினி அம்மா

இருபாலை பழவீட்டைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பறுபபத்தினி அம்மா அவர்கள் 13-6-93 அன்று இறைவனடி சேர்ந்துவிட்டார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-6-93 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இருபாலை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்கின்றேன்.

தகவல்:
பழவீடு, திருமதி ப சபாரத்தினம்
இருபாலை, (பெறாமகள்)
கோப்பாய். (26093)

## இளையதம்பி நாகலிங்கம்

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான இளையதம்பி நாகலிங்கம் அவர்கள் 13-06-93 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற பத்மராணி, தனசிங்கநாதன் (மேனன் றேடிங் கொம்பனி, கொழும்பு), தில்லைநாதன் தவராணி, நவராணி, கணநாதன் (சுவிஸ்), விஜயராணி ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லையா (பாரதி எண்டபிறைஸ் கொழும்பு), நிர்மலா பரிமளாதேவி, சாந்தலிங்கம், பாக்கியராணி (சுவிஸ்), சிற்சொரூபன் (சாயி ரஞ்சித் என்டர்பிறைஸ், கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அமராவதி செல்லத்துரை, Dr. வைத்திலிங்கம் (அராலி), காலஞ்சென்ற கற்பகம் அம்பலவாணர், காலஞ்சென்ற யோகம்மா சோமசுந்தரம், ஞானம்மா முத்தையா (பதுளை), ஆகியோரின் அன்புச் சகோதரரும்—

நடராசா, காலஞ்சென்ற சண்முகம், இரத்தின பூபதி விஜயரட்னம் (யாழ் பொது மருத்துவமனை), சத்தியவதி, அமிர்தலிங்கம், காலஞ்சென்ற இராசபாக்கியம் (அராலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14-06-93 திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு இல 5, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை சந்தர்மடம். யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நா. தனசிங்கநாதன்
5, இந்து மகளிர் ஒழுங்கை, (மகன்)
சந்தர்மடம். (26094)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 14-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கதிரவெளியில் படையினர் புதிய முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மட்டக்களப்பு மாவட்டம் கதிரவெளிப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் புதிய முகாம்களை அமைத்து அவற்றைப் பலப்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

''கடற்காற்று'' இராணுவ நடவடிக்கையின் பின்னர் அப்பகுதியில் முகாம் அமைத்துள்ள இராணுவத்தினர் அங்குள்ள மக்களை கெடுபிடிக்கு உள்ளாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-3)

## சாகும்வரை...
(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுக்குமாறு விடுதலைப் புலிகள் ஊடாக அரசாங்கத்தைக் கேட்டிருந்தும் அரசு அது குறித்து சனிக்கிழமை வரை ஆக்கபூர்வமான முயற்சி எதனையும் மேற்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

சாகும்வரை உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் 39 யுத்தக் கைதிகளையும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரி திரு. பியட்சுவஸ்ஸர் நேற்று காலை 10 மணியளவில் சென்று பார்வையிட்டார்.

அதன் பின்னர் உண்ணாவிரதம் ஆரம்பிக்கப்பட்டது குறித்து கொழும்புக்குத் தகவல் அனுப்பினார்.

நாளாந்தம் தாம் உண்ணாவிரதிகளைச் சென்று பார்வையிட்டு அவர்களின் நிலை குறித்து உடனுக்குடன் கொழும்புக்கு அறிவிக்கப் போவதாகவும் அவர் சொன்னார். (அ-3)

## யுத்தக் கைதி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பி. பி. ஸிக்கு அனுப்பிவைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

அக்கடிதத்தை பி. பி. ஸி. நிறுவனம் உடனடியாக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பணிமனைக்கு அனுப்பி வைத்ததாக அறிவிக்கப்பட்டது.

''வேறு வேலையில்லாததால் எனது மகன் பொலீஸ் வேலையில் சேர்ந்தார்.

இன்று இத்தகைய இடுக்கண்ணில் சிக்கியுள்ளார். எனது மகனை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு அரசுக்கு நாம் எழுதிய எந்தக் கடிதத்தினாலும் பலன் ஏதும் ஏற்படவில்லை. எங்கள் தலைவர்கள் இவ்விவகாரத்துக்கு தீர்வு காண்பார்கள் எனத் தென்படவில்லை. எனவே விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு நான் கடிதம் எழுதினேன்.'' — இவ்வாறு அத்தாயார் பி பி.ஸி.க்கு எழுதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். (உ-6)

## ஈழ அகதிகளை...
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ணிக்கும் என்றும் அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது தெரிந்ததே

இது குறித்து கலாநிதி பீற்றர் நிக்கலஸ் கருத்து வெளியிடுகையில்—

இச்செய்தி குறித்து தாம் சுவிஸ் தூதருடன் கலந்துரையாடியதாகவும்—

தஞ்சம் கோரியோரைத் திருப்பி அனுப்பும் திட்டம் ஏதும் உடனடியாகச் செயற்படுத்தப்படமாட்டாது என்று அவர் தெரிவித்ததாகவும் கலாநிதி நிக்கலஸ் சொன்னார்.

சுவிஸுக்குச் சென்று அங்கு தஞ்சம் கோரிய கொழும்பு மற்றும் தென்னிலங்கையைச் சேர்ந்த சுமார் நூறு தொடக்கம் இருநூறு பேர் வரை முதலில் அடையாள நடவடிக்கையாக அங்கிருந்து திருப்பி அனுப்பப்படக்கூடும் என்றும்—

எனினும் அப்படி அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டாலும் அவர்களை வைத்துப் பராமரிப்பதற்காக தென்பகுதியில் விசேட முகாம் அமைக்கவேண்டிய தேவை ஏதும் இல்லை என்றும் கலாநிதி நிக்கலஸ் மேலும் குறிப்பிட்டார். (உ-3)

# கிழக்கில் பிடிக்கும் இடங்களை ராணுவம் இனி கைவிடாதாம்!

கொழும்பு, ஜூன் 14

கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் தாக்குதல் நடத்திவிட்டு அப்பகுதிகளில் இருந்து இராணுவம் முன்னர் வெளியேறுவது போன்று, இம்முறை நடந்து கொள்ளப்போவதில்லை என்றும்—

பிடித்த கிராமங்களை தம்வசமே நிரந்தரமாக வைத்திருக்கும் வகையில் இராணுவத்தினரை அக்கிராமங்களில் நிறுத்தப்போவதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

வெரித்தாஸ் வானொலி இத்தகவலை வெளியிட்டது.

கிழக்கு மாகாணம் முழுவதும் தம்வசம் இருப்பதாக இராணுவமும் அரசும் கூறிக்கொண்டாலும், விடுதலைப் புலிகள் அவ்வப்போது காடுகளில் இருந்து வந்து இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (உ-எ)

# குமண, நில்கிரி கப்பல்கள் நாளை வடக்கே புறப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 14

கொழும்பில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிக்கொண்டு ''குமண'' கப்பலும்—

ஒரு தொகுதி பரல் மண்ணெண்ணெயை ஏற்றிக்கொண்டு ''நில்கிரி'' கப்பலும்—

நாளை ஒரே நேரத்தில் பருத்தித்துறையை நோக்கிப் புறப்படும் என நேற்று மாலை கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இவ்விரு கப்பல்களும் பெரும்பாலும் வெள்ளிக்கிழமை அல்லது சனிக்கிழமை பருத்தித்துறையை வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது

''குமண'' கப்பலில் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கான பொருள்களும், யாழ். பல்கலைக்கழகத்துக்கு இரசாயனப் பொருள்களும், 300 தபால் பொதிகளும் எடுத்து வரப்படவிருப்பதாக முற்கொண்டு கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இதற்கிடையில்—

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி வரும் ''குமாரி'' கப்பல் இன்று கொழும்பு திரும்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-3)

### ஊழியரைத் தவிக்கவிட்டு
# வெளிநாட்டு முதலீட்டாளர் திடீரெனத் தலைமறைவு

வெளிநாட்டு முதலீட்டாளர் ஒருவர் தமது தொழிற்சாலைகளில் வேலை செய்த நூற்றுக் கணக்கான ஊழியர்களை இடைநடுவில் கைவிட்டு நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்று கூறப்படுகிறது.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் கடந்த ஐந்து வருடங்களாக வரிவிலக்கு சலுகைகளைப் பெற்று இரண்டு தொழிற்சாலைகளை நடத்தி வந்த ஒரு தொழில் அதிபரே இவ்வாறு சொல்லாமல் கொள்ளாமல் கம்பி நீட்டியிருக்கிறார்.

அரசுக்கோ அல்லது இலங்கை முதலீட்டுச் சபைக்கோ அறிவிக்காமல்—

தமது தொழிலாளர்களை நடுவீதியில் விட்டுவிட்டு இவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டதாகக் கூறப்படுகிறது. (உ-6)

## பிரேமா...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்குத் தெரிவித்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

வீரக்குமார் என்று நம்பப்படுபவரின் விவரங்களைக் கொண்ட துண்டுப் பிரசுரங்கள் இலங்கையிலும் இந்தியாவில் உள்ள அகதி முகாம்களிலும் விநியோகிக்கப்படும்

கொலையாளி வீரக்குமார் என்று நம்பக் கூடிய சில பத்திரங்களும் பிறப்புச் சான்றிதழும் ஏற்கனவே பொலீஸாரின் கைகளுக்கு கிடைத்துள்ளன. எனினும் எவ்வித சந்தேகத்துக்கும் இடமின்றி கொலையாளியின் அடையாளத்தை ஊர்ஜிதம் செய்ய சி. ஐ. டி. பிரிவினர் விரும்புகின்றனர். என்றும் அச்செய்தியறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

## கடற்தாக்குதல்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர் குருநகர் தண்ணீர் தாங்கி வீதியிலும், கைதடியிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

அதைத் தொடர்ந்து தென்மராட்சிப் பகுதிக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்ட புகழுடல்கள், கொடிகாமச் சந்தை மைதானத்தில் மக்கள் அஞ்சலிக்கு வைக்கப்பட்டன.

புகழுடல்கள் சென்ற இடம் எல்லாம் மக்கள் வீதிகளில் கூடி நின்று இரு வேங்கைகளுக்கும் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

வீதி எங்கும் தோரணங்களும், கறுப்புக் கொடிகளும் கட்டப்பட்டிருந்தன. முக்கிய சந்திகள் தோறும் சோககீதங்களும், விடுதலைப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன.

இரு மாவீரர்களினதும் இறுதி ஊர்வல நிகழ்ச்சிகள் இன்று வடமராட்சியில் நடைபெறவிருக்கின்றன.

இன்று செம்பியன்பற்று நாகர் கோவில், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதைத் தொடர்ந்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் புகழுடல்கள் விதைக்கப்படவிருக்கின்றன.

## உயிரைப்..,
[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான எமது கடிதங்கள் விடுதலைப் புலிகள் மூலம் தான் அனுப்பப்பட்டன.

அக்கடிதங்கள் அரசாங்கத்துக்குக் கிடைத்தனவா? ஜனாதிபதி அவற்றைக் கவனிக்கத் தவறினாரா? என்பவை குறித்து எங்களால் கூறமுடியாமல் இருக்கிறது.

எம்முடன் இருந்த இரு பொலீஸாரை நல்லெண்ண அடிப்படையில் விடுவித்தமைக்காக விடுதலைப் புலிகளுக்கு நாம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இவர்கள் இருவரும் எங்கள் விடுதலை தொடர்பாக உற்சாகத்துடன் . நடவடிக்கை எடுத்திருந்தார்கள்.

எங்கள் விடுதலை தொடர்பாக பொதுமக்கள் என்ன கருத்து, நிலைப்பாடு கொண்டிருக்கிறார்கள் என்பதை நாங்கள் சிறையில் இருப்பதால் சரியாக அறியமுடியவில்லை.

இந்தப் போராட்டம் மூலம் நாங்கள் விடுவிக்கப்படுவோம் என்ற நம்பிக்கையினால்தான் நாம் இதனை ஆரம்பித்திருக்கிறோம்.

இருந்த போதிலும் இப்போராட்டத்தில் நாங்கள் இறந்துவிட்டால் எமது விடுதலைக்காக நாம் இதைச் செய்தோம் என்பதும்—

இதில் சம்பந்தப்பட்டவர்கள் யார் என்பதும்—

மக்களுக்கும் படையினருக்கும் தெரியவரும். — இப்படி அவர் மேலும் குறிப்பிட்டார். (உ-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org